Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 21

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. "வண்டோ கானத்திடையிருந்து வந்து கமல மதுவுண்ணும்" என்பதில் கானம் என்பது
   1. இதழ் 2. குளம் 3. காடு 4.தேன்
2. "நாட்டார் பாடல்கள் பாமர மக்களின் இதயங்களில் இருந்து ஊற்றெடுப்பவை" இங்கு பாமரர் என்பதன் எதிர்ப்பதம்
   1. ஏழை 2. பண்டிதர் 3. பேதையர் 4. புல்லர்
3. "அரசாங்கம் யுத்தத்தில் கணவனை இழந்தவர்களாகிய விதவைகளுக்கு உதவிகள் செய்துள்ளது. இங்கு விதவை என்பதன் எதிர்ப்பாற்சொல்
   1. விதவன் 2. தபுதாரன் 3. அநாதை 4. விதவையன்
4. "நாய் அனையர் கேண்மை தழீஇக்கொள்ளல் வேண்டும்" கேண்மை என்பதன் எதிர்ப்பதம்
   1. நட்பு 2. பகைமை 3. அன்பு 4. வன்பு
5. "தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினை" இங்கு கயம் என்பதன் பொருள்
   1. கடல் 2. குளம் 3. முட்டை 4. நீர்

பகுதி 2

1) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்
   எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்
   கொள்ளார் இற்றைத்திங்கள் இவ்வெண் நிலவில்
   வென்று எறி முரசின் வேந்தர் எம் குன்றும்
   கொண்டார் யாம் எந்தையும் இலமே

   1. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் என்ன?
   2. இப்பாடலை பாடியவர் யார்?
   3. திங்கள் என்பதன் பொருள் யாது?
   4. வென்று எறி முரசின் வேந்தர் என குறிப்பிடப்படுபவர் யார்?
   5. குன்று என குறிப்பிடப்படும் மலையின் பெயர் என்ன?
   6. எந்தை என குறிப்பிடப்படும் மன்னன் யார்?

2. அழகான நடைவண்டி
   அசைந்தாடும் கிலுகிலுப்பை
   பழக ஒரு மரப்பாச்சி
   பாவையரே யார் பறிச்சா?
   தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில்வரை
   ரத்த வெள்ளம்
   பால்வார்த்த நிலா முகத்தில்
   பற்றிவிட்ட தீப்பந்தம்

   1. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியம் என்ன?
   2. அதனை எழுதியவர் யார்?
   3. இப்பாடல் யாருடைய துயரத்தை எடுத்துக்கூறுகின்றது?